Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, FEBRUARY 07, 2023

செவ்வாய்க்கிழமை பெப்ரவரி 07, 2023 | ஒளி: 08 கதிர்: 203 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE

# மூன் வந்தார்



ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வருகை தந்துள்ளார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக, நேற்று (06) அதிகாலை நாட்டுக்கு வருகை தந்த அவரை, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய வரவேற்றுள்ளார்.

தொடர்ச்சி P2



துருக்கி, சிரியாவில்

## பாரிய நிலநடுக்கம் 1,300 பேர் பலி

துருக்கி மற்றும் சிரியாவில் திங்கட்கிழமை (06) ஏற்பட்ட 7.8 ரிக்டர் அளவிலான பாரிய நிலநடுக்கத்தால், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்றும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்றும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

முழுச் செய்தி P8

# நாளை பாரிய போராட்டம்

**மின்சார சபையில் ஆறு இலட்சம் மாதாந்த சம்பளம் பெறுபவர்களும் இருக்கிறார்கள்**

தொழிலாளர்களை இணைத்துக் கொண்டு நாளையதினம் (08) கொழும்பில் பாரியதோர் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தவுள்ளதாக இலங்கை சுதந்திர தொழிலாளர்கள் சங்கத்தின் செயலாளர் தேசபந்து லெஸ்லி தேவேந்திரா தெரிவித்தார்.



முழுச் செய்தி P8

## “மஹிந்தவிடம் சொல்லுங்கள்” மூனுக்கு ஞாபகமூட்டினார் மனோ

**13+ க்கு உடன்பட்டதை ஞாபகமூட்டவும் தவறு செய்தது ஐ.நாவும் தான்**



போர் முடிந்த சில நாள்களில் இலங்கை வந்து, தமிழினம் எதிர்கொண்ட போரழிவுகளை பார்த்து விட்டு, ஊர் திரும்பும் முன்னர், அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை

தொடர்ச்சி P2

## ஆனோல்ட் நியமனத்தை சவாலுக்கு உட்படுத்திய வழக்கு ஒத்திவைப்பு

நிதர்ஷன் வினோத்



யாழ்.மாநகர சபை மேயர் ஆனோல்டை, மேயராகப் பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தமானி தொடர்பான வழக்கை, யாழ்ப்பாண மேல்நீதிமன்றம் பெப்ரவரி 13ஆம் திகதிக்கு தவணையிட்டுள்ளது. ஜனவரி 20ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வடக்கு மாகாண

தொடர்ச்சி P2

## 2 பிள்ளைகளைக் கொன்ற தந்தை தன்னுயிரை மாய்த்தார்



தன்னுடைய இரண்டு பிள்ளைகளையும் வெட்டி படுகொலைச் செய்த தந்தை, தன்னுயிரை மாய்த்துக்கொண்ட சம்பவமொன்று அரநாயக்கவில் நேற்று (06) இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

மின்வெட்டு விவகாரம்

## ஆசிரியர் சங்கத்தின் மனுவை பரிசீலிக்க திகதி நிர்ணயம்



க.பொ.த உயர்தரப் பரீட்சை நிறைவடையும் வரை, மின் துண்டிப்பை தவிர்க்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடக் கோரி இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் ஜூலை 14 ஆம் திகதி பரிசீலிக்க உயர் நீதிமன்றம், திங்கட்கிழமை (06) உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2

## இந்திய மாநாட்டில் சீன நிதியமைச்சர்

**ஐஎம்எப் பணிப்பாளர் அறிவிப்பு**



சீனாவின் நிதியமைச்சர் மற்றும் அந்த நாட்டின் மத்திய வங்கி ஆளுநர் ஆகியோர் இந்தியாவில் இடம்பெறவுள்ள கடன் வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்க உள்ளதாக சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர் கிறிஸ்டினா ஜோர்ஜீவா ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## நிதியமைச்சின் முன் பதற்ற நிலை

**அதிகாரிகளுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது**

அரசாங்கத்தால் அமல்படுத்தப்பட்டுள்ள வரிக் கொள்கைக்கு எதிராக நிதியமைச்சுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அரச மற்றும் தனியார் ஊழியர்கள் உள்ளிட்ட தொழிற்சங்க பிரதிநிதிகள் குழு, நிதியமைச்சில் கடிதமொன்றை கையளிக்க முற்பட்ட போது, அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

திங்கட்கிழமை (06) நிதியமைச்சுக்கு முன்னால் 60 பேர் வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கடிதமொன்றை கையளிக்க முயன்றபோது, ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதிக்க முடியாது என்று பொலிஸார் அவர்களை தடுத்ததை அடுத்து, கடும் வாக்குவாதம் ஏற்பட்டதுடன், அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

தொடர்ச்சி P2



# ஜனாதிபதி முன்னிலையில் மூவர் பதவிப் பிரமாணம்



மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் கே.பி பெர்னாண்டோ உயர்நீதிமன்ற நீதியரசராகவும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரட்ன மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

மேலும், மேல் நீதிமன்ற நீதிபதி எம்.ஏ.ஆர் மரிக்கார் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

கொழும்பு, கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் திங்கட்கிழமை (06) காலை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

தொடர்ச்சி P2

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின்

## மனுவை நாளையதினம் பரிசீலிக்கத் தீர்மானம்



க.பொ.த உயர்தரப் பரீட்சை காலத்தில் மின்வெட்டைத் தடுப்பதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தாக்கல் செய்த மனுவை நாளையதினம் (08) பரிசீலிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம், திங்கட்கிழமை (06) தீர்மானித்தது.

தொடர்ச்சி P2

## லாஃப்ஸ் எரிவாயு விலையும் உயர்வு

**200, 80, 32 ரூபாயால் அதிகரிப்பு**




லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம், உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை உயர்த்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

12.5 கிலோ கிராம், 5 கிலோ கிராம், 2 கிலோ கிராம் நிறை கொண்ட உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் முறையே 200, 80 மற்றும் 32 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## 13ஆவது திருத்தம் கசக்கிறது; வரப்பிரசாதங்கள் இனிக்கிறதோ?

**ஆளுநர்களை தூற்றினார் அரவிந்த குமார்**



பாராளுமன்றத்தில் சட்டமாக அங்கிகரிக்கப்பட்டு இலங்கை அரசியலமைப்புக்குள் உள்வாங்கப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்ளாத அல்லது அதனைமுழுமையாக அமலாக்கம் செய்வதற்கு தடையாக இருக்கின்ற இல்லாவிட்டால் 13க்கு எதிராக போர்க்கொடி தூக்கி நிற்கின்ற மாகாண ஆளுநர்கள், தங்களது பதவிகளையும் வரப்பிரசாதங்களையும் துறந்து வீடுசெல்ல வேண்டும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# கொள்கை அறிக்கையை ஐ.ம.ச புறக்கணிக்கும்



**நளின் பண்டார ஜயமஹா தெரிவிப்பு**

**இறுதித் தீர்மானம் கட்சி உறுப்பினருக்கு அறிவிக்கபபடும்**

நாளை (08) ஆரம்பமாகும் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரின் சம்பிரதாய ஆரம்ப நிகழ்வு மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை அறிக்கை மீதான விவாதம் ஆகியவற்றை ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணிக்கும் என்று அக்கட்சியின் எம்.பியான நளின் பண்டார ஜயமஹா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாளை புதன்கிழமை வெளியிடப்படும் கொள்கை அறிக்கை மற்றும் சமர்ப்பிப்பை கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்கவுள்ளனர் என்று குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நாளை பாரிய போராட்டம்

ராஜகிரியவில் உள்ள சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் சங்கத்தின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "இலங்கையில் என்றுமில்லாதவாறு பொது மக்கள் மீது பாரிய வரிகளை அரசாங்கம் சுமத்தியுள்ளது. இதனை மக்கள் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு சொல்லொன்னாத் துன்பங்களையும் அவலங்களையும் எதிர்நோக்குகின்றனர்.

200 சதவீதம் வரை மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேபோல நீர், பெற்றோலியம், எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கும் நாளுக்கு நாள் வரி அதிகரிக்கப்பட்டு விலைகளும் உயர்கிறது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் எமது நாட்டு விமானங்கள் வேறு ஒரு நாட்டுக்கு சென்று பிரயாணிகளை ஏற்றிக் கொள்ளமுடியாத நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். ஆனால், வேறு நாட்டு விமானங்கள் எமது நாட்டு பிரயாணிகளை எந்த வித வரியும் இன்றி ஏற்றிச் செல்கின்றன. நீண்டதூர விமானப் பயணங்களை வேறு நாடுகளுக்கு தாரை வார்த்துக் கொடுத்துள்ளதால் எமக்கு பாரிய வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

மின்சார சபையை பல்வேறு நாடுகளுக்கும் விற்று, அதனை அவர்கள் எதிர்பார்த்த இலாபத்தைப் பெற்றுக் கொள்ளவே, பாரிய மின் கட்டண அதிகரிப்பை மக்கள் தலைமீது சுமத்தப்பட்டுள்ளது. மின்சார சபையின் தலைவருக்கு ஓய்வுபெற்ற இரண்டு பொது முகாமையாளர்கள் ஆலோசகர்களாக உள்ளனர். அவர்களுக்கு 6 இலட்சம் மாதாந்த சம்பளம் வழங்கப்படுவதையும் சுட்டிக்காட்டினார்.

இந்த நாட்டில் உள்ள சகல அதிகார சபைகள், கூட்டுத்தாபனங்களின் சுதந்திர தொழிலாளர் சங்கங்கள், பெப்ரவரி 08ஆம் திகதி புறக்கோட்டையில் பாரிய தொழிற்சங்க போராட்டமொன்றை நடத்தவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

## மனுவை நாளையதினம் பரிசீலிக்க தீர்மானம்

சோபித ராஜகருணா, தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அன்றையதினம் ஆவணங்களை சமர்ப்பிக்க ஆணைக்குழுவுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குமாறு மின்சார சபைக்கு உத்தரவிடுமாறு கோரி பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் கடந்த 1ஆம் திகதியன்று மனு தாக்கல் செய்யப்பட்டது.

## ஆசிரியர் சங்கத்தின் மனுவை பரிசீலிக்க திகதி நிர்ணயம்

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர், விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர், மின்சார சபையின் தலைவர், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், சட்டமா அதிபர் உள்ளிட்டோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பிரியந்த ஜயவர்தன, அச்சல வெங்கப்புலி, மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன், பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை ஆணையாளருக்கு நோட்டீஸ் அனுப்புமாறு மனுதாரருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

பெப்ரவரி 17 ஆம் திகதி நிறைவடையும் உயர்தர பரீட்சைக் காலத்தில் மின்வெட்டு அமல்படுத்தப்பட மாட்டாது என்று இலங்கை மின்சார சபையும் மின்சக்தி அமைச்சின் செயலாளரும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு உறுதிமொழி வழங்கியதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த வாக்குறுதியை மீறி பிரதிவாதிகள் மின்சாரத்தை துண்டித்ததால், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஆனோல்ட் நியமனத்தை சவாலுக்கு உட்படுத்திய வழக்கு ஒத்திவைப்பு

உள்ளூராட்சி ஆணையாளரால் யாழ். மாநகர சபையின் மேயராக இ.ஆனோர்ல்ட் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், யாழ். மாநகர சபை மேயர் ஆனோல்ட், மேயராகப் நியமிக்கப்பட்டமை சட்டவிரோதமானது எனக்கோரி, அதனடிப்படையில் அவரது பதவி நியமனம் குறித்த வர்த்தமானி அறிவித்தலைச் செல்லுபடியாற்றதாக அறிவிப்பதற்கும், மேயராக ஆனோல்ட் தொடர்வதற்கு இடைக்காலத் தடை உத்தரவு விதிக்குமாறு கோரியும் யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு மீதான விசாரணை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நேற்று (06) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது இரு தரப்புகளின் சமர்ப்பணங்களை ஆராய்ந்த யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி, வழக்கை பெப்ரவரி 13ஆம் திகதிக்கு தவணையிட்டார்.

குறித்த வழக்கில், யாழ். மாநகர மேயர் , யாழ் மாநகர ஆணையாளர் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன், கே.சயந்தன் ஆகியோரும் மனுதாரரான யாழ்.மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் சார்பில் சட்டத்தரணி கு.குருபரன், வி.மணிவண்ணன், வி.திருக்குமரன் ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

## லாஃப்ஸ் எரிவாயு விலையும் உயர்வு

5,080 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த 12.5 கிலோ கிராம் சிலிண்டர் 5,280 ரூபாய்க்கும் 2.032 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த 5 கிலோ கிராம் சிலிண்டர் 2,112 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படவுள்ளன.

மேலும், 813 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த 2 கிலோ கிராம் சிலிண்டர் 845 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் என்றும் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேவேளை, உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரிப்பு காரணமாக எரிவாயு விலைகளை 5ஆம் திகதி நள்ளிரவு முதல் அதிகரிப்பதாக லிட்ரோ நிறுவனமும் அறிவித்திருந்தது.

அதற்கமைய, 4,409 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட 12.5 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 4,743 ரூபாயாகவும், 5 மற்றும் 2.3 கிலோ சிலிண்டர்களின் புதிய விலைகள் முறையே 1,904 ரூபாயாகவும் 883 ரூபாயாகவும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## #N2E பேரணிக்கு வாரீர்

வ.சக்தி

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களின் மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட (#N2E) பேரணியானது வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி நகருகிறது. அதில், தமிழர் என்ற உணர்வுடன் எல்லோரும் கலந்து கொள்வோம் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த மாபெரும் போராட்டமானது இன்று (07) செவ்வாய்கிழமை காலை 9 மணியளவில் வெருகலை வந்தடையும். மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து செல்வோர் கதிரவெளியில் மு.ப.10, மணிக்கு இணைந்து கொள்வார்கள்.

மட்டக்களப்பை 11 மணிக்கு சென்றடையும் பேரணி, பிற்பகல் 03, மணிக்கு மட்டக்களப்பு காந்தி பூங்காவை வந்தடையும்.

அதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் இருந்து வருகை தரும் மற்றுமொரு பேரணி மு.ப. 11 மணியளவில் பெரியகல்லாற்றை கடக்கும். களுதாவளையில் பிள்ளையார் கோவில் சந்தியை பி.ப. 1.30, மணிக்கு வந்தடையும்.

அங்கிருந்து புறப்பட்டு, மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தை பி.ப 03, மணிக்கு வந்தடைந்து பேரணி தொடர்பான பிரகடனம் வாசிக்கப்பட்ட பின்னர் இந்த கவன ஈர்ப்பு போராட்டம் நிறைவு பெறும் என அதன் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## 2 பிள்ளைகளைக் கொன்ற தந்தை தன்னுயிரை மாய்த்தார்

அரநாயக்க, பொல்அம்பேகொட பகுதியில் வீடொன்றிலிருந்து இரண்டு சிறுவர்களின் சடலங்களும் வீட்டுக்கு அருகிலிருந்து அவர்களுடைய தந்தையின் சடலமும் மீட்கப்பட்டுள்ளன.

பிள்ளைகளில் ஒருவர் 6 வயதான சிறுவன் என்றும் மற்றையவர் ஒன்பது வயதான சிறுமி என்றும் அறியப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பிள்ளைகளின் தாய் தொடர்பிலான தகவல்கள் வெளியாகவில்லை என்பதுடன், மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## இந்திய மாநாட்டில் சீன நிதியமைச்சர்

குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் பணம் செலுத்த முடியாததால், சீனா தனது கொள்கைகளை மாற்றிக்கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் இடம்பெறும் வட்டமேசை கூட்டத்தில் பாரம்பரிய கடன் வழங்குபவர்களையும், சீனா, சவூதி அரேபியா, இந்தியா போன்ற புதிய கடன் வழங்குநர்களையும், அதே போன்று தனியார் துறையினரையும் பங்கேற்க வைக்கவுள்ளதாக ஜோர்ஜீவா கூறினாார்.

அதிக கடனில் உள்ள நாடுகளுக்கு கடன் நிவாரணம் மிகவும் முக்கியமானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். பெப்ரவரி மாதத்தின் இறுதியில் ஏனைய கடன் வழங்குநர்கள் மற்றும் சில கடன் வாங்கும் நாடுகளுடன் இந்தியாவில் வட்டமேசை கூட்டம் இடம்பெறவுள்ள நிலையில், இந்தக் கூட்டத்திலேயே சீனாவின் நிதியமைச்சரும், மத்திய வங்கியின் ஆளுநரும் பங்கேற்கவுள்ளனர் என்று ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்

## நிதியமைச்சின் முன் பதற்ற நிலை

அதன் பின்னர், பொலிஸாரின் தலையீட்டில், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் நிதியமைச்சின் அதிகாரிகளுக்கும் கலந்துரையாடல் இடம்பெற்றது.

## மூன் வந்தார்

பான் கீ மூனுடன் மேலும் 04 இராஜதந்திரிகளும் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட முக்கிய தரப்பினரை சந்தித்துப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளனர்.

அத்துடன், காலநிலை தொடர்பிலான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் இடம்பெறவுள்ளதாக அறியமுடிகின்றது.

## கொள்கை அறிக்கையை ஐ.ம.ச புறக்கணிக்கும்

வியாழன், வெள்ளிக்கிழமைகளில் நடைபெறவுள்ள ஜனாதிபதியின் கொள்கை அறிக்கை மீதான இரண்டு நாள் விவாதத்தையும் புறக்கணிக்க தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாகவும், இறுதித் தீர்மானம் அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## 13ஆவது திருத்தம் கசக்கிறது; வரப்பிரசாதங்கள் இனிக்கிறதோ?

13ஆவது திருத்தம் கசப்பாக இருக்கும் ஆளுநர்களுக்கு மாகாண சபைகளின் ஊடாக கிடைக்கப்பெறுகின்ற வரப்பிரசாதங்கள் மாத்திரம் தேனாக இனிப்பது தான் வேடிக்கையாக இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் எழுந்துள்ள அரசியல் ரீதியிலான பிணக்குகள் மற்றும் எதிர்ப்புகள் தொடர்பில் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துகையிலேயே கல்வி ராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

13 ஆவது திருத்தம் எனும் போது அது அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ள விடயமாகும். பாராளுமன்றத்தில் அங்கிகரிக்கப்பட்டுள்ள 13ஆவது திருத்தம் இதுவரையில் சவாலுக்கு உட்படுத்தப்படவும் இல்லை. அதேநேரம் அது அரசியலமைப்பிலிருந்து நீக்கப்படவுமில்லை; அல்லது பிரிதொரு திருத்தம் கொண்டு வரப்பட்டு 13ஆவது திருத்தம் வலுவிழக்க செய்யப்படவும் இல்லை என்பதை முதலில் சகலரும் புரிந்துகொள்ள வேண்டும்.

13ஆவது திருத்தத்தின் ஊடாகவே மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு ஸ்தாபிக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கென ஜனாதிபதியின் நம்பிக்கை மிகுந்த நேரடி பிரதிநிதியாக மாகாண ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் அழுத்தமாக கூறப்பட வேண்டிய விடயம் தான் மாகாண ஆளுநர்கள் ஜனாதிபதியின் நம்பிக்கை மிகுந்த நேரடி பிரதிநிதிகள் என்பதற்கு அப்பால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியொருவருக்கு நிகரான அதிகாரங்களை மாகாண ஆளுநர்கள் தங்களது மாகாண எல்லைக்குள் கொண்டிருக்கின்றனர். அவ்வாறான பதவி நிலையும் வரப்பிரசாதங்களும் இன்னோரன்ன தேவைகளும் சேவைகளும் ஒருசேர அனுபவிப்பவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். அது மாத்திரமன்றி அரசியலமைப்புக்கு பாத்திரமாக செயற்படக்கூடிய மிக முக்கிய பதவி நிலையினராகவும் இவர்கள் இருக்கின்றனர்.

நிலைமை இவ்வாறிருக்க அரசியல் சமூக பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டிருக்கும் நம் நாட்டை அதிலிருந்து மீட்டெடுப்பதற்கும் நாட்டு மக்கள் பொருளாதார மீட்சியை அனுபவிப்பதற்கும் படிப்படியான திட்டங்களை வகுத்து காய்நகர்த்தி வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் இந்தியாவுக்கு உறுதியளிக்கப்பட்டதான 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்தல் என்னும் செயல் திட்டத்தை மேற்கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் என்றார்.

## "மஹிந்தவிடம் சொல்லுங்கள்" மூனுக்கு ஞாபகமூட்டினார் மனோ

சந்தித்து பேச்சுகள் நடத்தி, இருவரும் சேர்ந்து வெளியிட்ட கூட்டறிக்கையை ஞாபகப்படுத்த வேண்டுமென தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் இலங்கை வந்துள்ள முன்னாள் ஐ.நா செயலாளர் பாங்கி-மூனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மே 24, 2009 அன்று வெளியிடப்பட்ட அந்த கூட்டறிக்கையில், தான் தமிழ் கட்சிகளுடன் பேச்சு நடத்தி 13ஐ அமல் செய்து, அதை மேன்மேலும் மேம்படுத்த (13+) உடன்படுவதாகவும், அதேபோல் சர்வதேச மனித உரிமை நியமங்களை ஏற்று, இலங்கையில் கடைபிடிப்பதாகவும் உலக மன்றமான ஐ.நாவுக்கு, அதன் பிரதான நிறைவேற்று அதிகாரியான ஐ.நா செயலாளர் பாங்கி-மூன் என்ற உங்களுக்கும் உறுதி அளித்ததை அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஞாபகமூட்டவேண்டும் என்றார்.

> **மே 24, 2009 அன்று வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், தான் தமிழ் கட்சிகளுடன் பேச்சு நடத்தி 13ஐ அமல் செய்து, அதை மேன்மேலும் மேம்படுத்த (13+) உடன்படுவதாகவும், அதேபோல் சர்வதேச மனித உரிமை நியமங்களை ஏற்று, இலங்கையில் கடைபிடிப்பதாகவும் உறுதியளிக்கப்பட்டது**

இன்றைய அரசாங்கத்தின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுனவின் அதிகாரபூர்வ தலைவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், அவரது எம்.பிகளுக்கும், இவர்களின் பின்னால் இன்னமும் நிற்கும் சில பௌத்த பிக்குகளுக்கும் ஞாபகப்படுத்த வேண்டுமென கோரியுள்ளார்.

பொறுப்பை நிறைவேற்றாது தவறு செய்து, குற்றவாளி கூண்டில் இன்று நிற்பது அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மட்டுமல்ல, ஒட்டு மொத்த ஐ.நா அமைப்பும் என நான் நம்புகிறேன். இவர்கள் அனைவரும் குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

பாங்கி-மூன் - மஹிந்த கூட்டறிக்கையில், கையெழுத்து இட்ட ஒரு தரப்பு வார்த்தை தவறுமானால், அடுத்த தரப்பு அதை தட்டிக்கேட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் பெயர்தான் கூட்டறிக்கை. ஆனால், அதை ஐ.நா செய்யவில்லை. அது மட்டுமல்ல, போர் நிகழ்ந்த போது, வன்னியில் இருந்த ஐ.நா அலுவலகத்தை இலங்கை அரசு சொன்னது என்பதற்காக மூடி விட்டு நாட்டை விட்டு வெளியேறிய அன்றைய ஐ.நாவின் முடிவுக்கு, முன்னாள் ஐ.நா செயலாளரான இந்த பாங்கி-மூன் பொறுப்பேற்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள முன்னாள் ஐ.நா செயலாளர் பாங்கி-மூன், சந்திக்கும் நபர்களின் நிகழ்ச்சி நிரலில் நான் இல்லை. நான் அவரை கண்டால் இதை அவர் முகத்துக்கே சொல்லிக் கேட்க விரும்புகிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி முன்னிலையில் மூவர் பதவிப் பிரமாணம்

இதேவேளை, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, முப்படைத் தளபதிகள் உள்ளிட்ட பல அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# நவம் பெரஹரா

கொழும்பு-02, கங்காராம விஹாரையின் வருடாந்த நவம் பெரஹரா, கோலாகலமாக ஞாயிறன்று (05) நடைபெற்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து பெரஹராவை ஆரம்பித்து வைத்தனர்.

(நிஷால் பதுகே)



















# கொல்லாமல் கொல்ல பார்க்கிறார்கள்



தன்னைக் கொல்லாமல் கொல்லப் பார்ப்பதாக தெரிவிக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தான் ஒருபோதும் அஞ்சி பின்வாங்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

நான் எதற்கும் பயப்படப்போவதில்லை. அதுபோல பின்வாங்கவும் போவதில்லை. நெல்சன் மண்டேலா 27 வருடங்கள் சிறைச்சாலையில் இருந்து பின்னர் ஜனாதிபதியானார். பண்டாரநாயக்கவைக் கொலை செய்தார்கள். சிறிமாவோவின் பிரஜாவுரிமையை பறித்தார்கள். இப்போது என்னைக் கொல்லாமல் கொல்லப் பார்க்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

சர்வதேசத்துடன் எனக்கிருக்கும் தொடர்புகள் காரணமாகவே என்னையும் எனது கட்சியையும் அழிக்கப் பார்க்கிறார்கள். நாட்டை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும். நாடு முகங்கொடுக்கும் பிரச்சினைகள் என்ன என்பது தொடர்பில் எனக்கு நன்கு தெரியும். சுதந்திரக் கட்சிக்கு தெளிவான எதிர்காலம் இருக்கிறது என்றார்.

## தர்ஷனவுக்கு பிணை

■ டி.கே.ஜி.கபில



குற்றப் புலனாய்வு பிரிவினரால் (சி.ஐ.டி) நேற்று முன்தினம் (05) கைது செய்யப்பட்டிருந்த தர்ஷனவை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்துள்ளது.

'யூடியூப்' சமூக ஊடக செயற்பாட்டாளர் நிஷாந்த தர்ஷன ஹதுங்கொட, டுபாயிலிருந்து இலங்கை திரும்பிய போது, கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து கணினி குற்றப்பிரிவின் விசேட குழுவினரால் கைது செய்யப்பட்டார்.

2022 மே மாதம் 9ஆம் திகதி அலரிமாளிகையின் முன்பாக இருந்து 'பேஸ்புக்' சமூக வலைத்தளத்தில் நேரலையாக நிகழ்ச்சியை ஒளிபரப்பிய குற்றச்சாட்டின் கீழ் இவர் கைது செய்யப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த நிலையில், இரண்டு தடவைகள் கொழும்பு கணினி குற்றப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர், தர்ஷன ஹதுங்கொட டுபாய் சென்று திரும்பிய நிலையிலேயே கைது செய்யப்பட்டிருந்தார்.

அரசாங்கம், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கு எதிரான வீடியோக்களை தர்ஷன தொடர்ந்து தனது யூடியூபில் பதிவேற்றி வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓரிரு வாரங்களில் முட்டை வரும்



அடுத்த இரு வாரங்களுக்குள் முட்டை இறக்குமதி செய்யப்படும் எனத் தெரிவிக்கும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்ணான்டோ, தமிழ் - சிங்கள புத்தாண்டில் முட்டைக்கான கேள்வி அதிகரிக்கும் எனவும் தெரிவித்தார்.

முட்டைகளுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இன்னும் குறைவான விலைக்கு முட்டையை நுகர்வோருக்கு வழங்குவதற்கு நுகர்வோர் அதிகார சபையால் முடியும் எனவும் தெரிவித்தார்.

நாட்டில் தற்போதும் முட்டைக்கான தட்டுப்பாடு நிலவுகிறது. குறிப்பாக தமிழ் - சிங்கள புத்தாண்டில் முட்டைக்கான கேள்விகள் இன்னும் அதிகரிக்கும். எனவே, முட்டைகளை இறக்குமதி செய்தே ஆக வேண்டும் என்கிற நிலை காணப்படுகிறது.

இதனால், அடுத்த ஓரிரு வாரங்களுக்குள் முட்டையை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும். முட்டை இறக்குமதிக்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது. எவ்வாறாயினும் முட்டை இறக்குமதி தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் விசேட கலந்துரையாடல் நாளை (08) நடைபெற உள்ளதாகவும் தெரிவித்தார்.



## 'காஷ்மீர் நட்புறவு தினம்' அனுஷ்டிப்பு

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் பாகிஸ்தானின் நிபந்தனையற்ற ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், 'காஷ்மீர் நட்புறவு தினத்தை' முன்னிட்டு கருத்தரங்கு மற்றும் புகைப்படக் கண்காட்சியை கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த விழாவில், பல வெளிநாட்டு தூதுவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாகிஸ்தான் சமூகத்தினர், காஷ்மீர் நலன்விரும்பிகள், இலங்கை ஊடக பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர்.

## மொட்டு, யானை பிரசாரங்களில் ஈடுபடாமைக்கு இதுவே காரணம்

உள்ளூராட்சி மன்ற தேர்தலை அரசாங்கம் பிற்போடும் என்பதாலேயே, மொட்டும் யானையும் பிரசாரச் செயற்பாடுகளில் ஈடுபடவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துல தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற அதேவேளை, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினதும், ஐக்கிய தேசிய கட்சியினதும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பாளர்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கிறார்கள். இதனால் எமக்குப் பாரிய சந்தேகங்கள் எழுந்துள்ளன.

மக்களின் வீடுகளுக்கு சென்று இவர்களுக்கு முகங்கொடுப்பதற்கு பயமா? இல்லை தேர்தல் நடக்காது என்பதை தெரிந்து இவர்கள் இவ்வாறு செய்கிறார்களா என்கிற அச்சம் ஏற்பட்டுள்ளது.

மொட்டும், யானையும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடவில்லை. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கட்டுப்பணங்களை செலுத்துவதில் காட்டிய ஆர்வத்தை, பிரசாரச் செயற்பாடுகளில் மொட்டுக் கட்சி காட்டவில்லை.

தேர்தலை காலந்தாழ்த்த அரசாங்கம் முயல்வதே இதனூடாக தெரிகிறது. ஆனால், நாட்டு மக்களின் கருத்துகளை அறிய மக்களுக்குள்ள உரிமையைப் பயன்படுத்த அரசாங்கம் இடமளிக்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயகம் தொடர்பில் உலக அளவில் பிரசித்தி பெற்றவர். ஆனால், மொட்டுக் கட்சியுடன் இணைந்த பின்னர், ஜனநாயகத்துக்கு எதிரான பல்வேறு அடக்குமுறைகளை செய்து வருகிறார் எனவும் தெரிவித்தார்.

## ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி உயிரோடு இருக்கிறார்



ஷானி அபேசேகரவின் ஈஸ்டர் விசாரணை அறிக்கை வெளியில் வந்தால் என்ன நடக்கும் என்பது தெரியாதென தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான், ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி இன்னும் உயிரோடு இருப்பதாகவும் தெரிவித்தார்.

முறையாக விசாரணைகள் செய்தால் ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை கைது செய்ய முடியும். ஆனால், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததன் பின்னர் முறையாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்கிற தேவை அவருக்கு இருக்கவில்லை. மேலும், குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்டோர் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் மேற்கொண்ட முறையான விசாரணைகள் கூட மறைக்கப்பட்டுள்ளன.

கோட்டா ஜனாதிபதியானதுமே ஈஸ்டர் விசாரணைகளை முன்னெடுத்த ஷானி உள்ளிட்ட குழுவினரை விலக்கிவிட்டு தங்களுக்குத் தேவையானவர்களை நியமித்து, முறையாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதை தடுத்தனர் எனவும் தெரிவித்தார்.

பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்ட பள்ளிவாயலை விடுவிக்குமாறு

# காத்தான்குடியில் ஹர்த்தால்

எம்.எஸ்.எம் நூர்தீன்



பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ள புதிய காத்தான்குடி, கப்பல் ஆலீம் வீதியிலுள்ள தாருள்அதர் பள்ளிவாயலை விடுவிக்குமாறு கோரி நேற்று (06) காத்தான்குடியில் ஹர்த்தால் இடம்பெற்றது. ஹர்த்தால் காரணமாக வர்த்தக ஸ்தாபனங்கள், சந்தைகள் மூடப்பட்டு, இயல்பு நிலை முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

இதன்போது, தாருள் அதர் பள்ளிவாயலுக்கு முன்பாக, அப்பகுதி பொதுமக்கள், காத்தான்குடி நகர சபை உறுப்பினர்கள், காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பிரதிநிதிகள் ஒன்றுகூடியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, 'அல்லாஹ்வை சுஜூது செய்த பள்ளிவாயலை விடுவிக்கவும்', 'பொலிஸார் மீது பொதுமக்கள் வைத்த நம்பிக்கையை சீரழிக்க வேண்டாம்', 'இறைவனின் இல்லத்தை இல்லாமல் ஆக்காதே','பொலிஸ் திணைக்களமே பள்ளிவாயல் புனிதத்தில் கறை பூசும் வரலாற்றை செய்யாதே' போன்ற வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகள் தொங்க விடப்பட்டிருந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கருத்துத் தெரிவித்த காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பொதுச் செயலாளரும் காத்தான்குடி நகர சபை உறுப்பினருமான அஷ்ஷெய்க் ஏ.எல்.எம் சபீல் நழீமி கூறியதாவது;

"இப்பள்ளிவாயல் பொது மக்களின் நிதிப்பங்களிப்பில் கட்டப்பட்டதாகும். இந்தப் பள்ளிவாயலை பொலிஸார் கையகப்படுத்துவதை நாங்கள் விரும்பவில்லை. இதைப் பொலிஸார் விடுவித்து, பொது மக்கள் தொழுவதற்கும் இறைவணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதற்கும் அனுமதிக்க வேண்டும் என ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சு ஆகியோரை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்" என்றார்.

இதன்போது அங்கு வந்த காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி, இந்தப் பள்ளிவாயலுக்குள் பொலிஸார் வரமாட்டார்கள் எனத் தெரிவித்ததையடுத்து பொது மக்கள் கலைந்து சென்றனர்.







## பாரம்பரிய நெல் அறுவடை

திருகோணமலை, மூதூர், மணற்சேனையில் தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி நெல் அறுவடை செய்து, புதிர் எடுக்கும் நிகழ்வு நேற்று (06) நடைபெற்றது. இதன்போது, விவசாயிகள் குடும்பத்தோடு மாட்டு வண்டில்களில வயலுக்குச் சென்று, பூஜைகள் நடத்தி புதிர் எடுத்தனர். மணற்சேனை சித்தி விநாயகர் கோவில் நிர்வாகம் இந்தப் பாரம்பரிய நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தீஷான் அஹமட்

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு

## லயன்ஸ் கிளப் அன்பளிப்பு




மாளிகைக்காடு நிருபர்

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு லயன்ஸ் கிளப் அமைப்பால் 3.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான Multi Parameter Monitors, ஒட்சிசன் சிலிண்டர்கள் என்பன வழங்கிவைக்கப்பட்டன.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஆசாத் ஹனீபாவால் இணைப்புச் செய்யப்பட்ட இந்நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல். எம் றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

குறித்த நிகழ்வில், லயன்ஸ் கிளப் அமைப்பின் உயர்மட்ட அதிகாரிகள், சம்மாந்துறை கோல்டன் சிட்டி அமைப்பினர், திட்டமிடல் வைத்தியர் நியாஸ் அஹமட் உள்ளிட்ட சுகாதார உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் பங்குபற்றியிருந்தார்கள்.



திருகோணமலையில்

## மாபெரும் அன்னதானம்

அ. அச்சுதன்

சுவிட்சர்லாந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி, சமூகநலம், பண்பாடு, அறப்பணி மையத்தால் திருகோணமலை, அன்புவழிபுரம் ஞான வைரவர் கோவிலில் வறிய மக்களின் பசி தீர்க்கும் மாபெரும் சக்திப் பொங்கல் நிகழ்வு நேற்று முன்தினம் (05) நடைபெற்றது.

அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சக்தி சரவணபவ ஆனந்தம் திருச்செந்தூரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வு, இலண்டன் ஓம்சக்தி அம்மா காப்பகத்தின் நிதி அனுசரணையில் அறப்பணி மையத்தின் நிறுவுநர் சக்தி சுவிஸ் சுரேஷின் நேரடி கண்காணிப்பில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.



## ஈரோஸ் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்

கதிரவன்

திருகோணமலை உள்ளூராட்சி தேர்தலுக்கான ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டு வைக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (05) திருகோணமலை சிவன்கோவிலடியில் உள்ள திருகோணமலை மாவட்ட பணிமனையில் நடைபெற்றது. கட்சியின் செயலாளர் இரா. இராஜேந்திரன் (ஜீவன்) செயலாளர் இ.கணேஷூக்கு விஞ்ஞாபனத்தை வழங்கி வைத்தார். திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்குப் போட்டியிடும் வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

சுதந்திரத்துக்கு முன்னரும் பின்னரும்

# தமிழ்த் தலைவர்கள் பல தவறுகள் இழைத்தனர்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள்



க. அகரன்

சிங்கள தேசத்தின் சுதந்திரத்துக்கு முன்னரும் பின்னரும் தமிழ்த் தலைவர்கள் எதிர்கால நோக்கம் இல்லாமல் பல தவறுகளை இழைத்தனர். அவர்கள், கொழும்பு ஆடம்பர வாழ்க்கையை விரும்பினர். சுதந்திரப் போராட்ட காலத்தில் தமிழ்த் தலைவர்கள் தமிழ் இறைமையையோ சமஷ்டியையோ கேட்காததற்கு கொழும்பு ஆடம்பர வாழ்க்கையே காரணம் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வவுனியா பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது, வடக்கு - கிழக்கு தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

75 வருடங்களுக்கு முன்னர், 50/50 அரசியல் அதிகாரம் என்று தமிழர்கள் பேசினர். பின்னர் சமஷ்டி பற்றி தொடர்ந்து பேசினார்கள். ஆனால், சமஷ்டி பற்றி பேசுவதன் மூலம் ஒவ்வொரு குடிமகனின் சுயநிர்ணய உரிமையை மறந்துவிட்டார்கள்.

தமிழர்கள் பல தவறுகளை இழைத்தார்கள். சி. சுந்தரலிங்கம் தான் முதலில் சிங்கள ஆட்சியை ஏற்று, டி.எஸ் சேனநாயக்கா அமைச்சரவையில் அமைச்சர் பதவியை ஏற்றார். சில வருடங்களின் பின்னர் தமிழீழத்துக்கு அழைப்பு விடுத்தார்.

பல தமிழர்கள் சுந்தரலிங்கத்தைப் பின்பற்றி சிங்கள அமைச்சரவையில் அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டனர். இதன் காரணமாக தமிழ் அரசியல்வாதிகள், தமிழர்களின் எதிர்காலம், அவர்களின் இருப்பை மறந்துவிட்டனர்.

தந்தை செல்வா மூன்று தசாப்தங்களாக சமஷ்டிக்காக குரல் கொடுத்தார். பின்னர் தமிழீழம் வேண்டும் என்று குரல் கொடுத்தார். அதன்பின்னர் வந்த சம்பந்தன்-சுமந்திரன் குழு, எமக்கிருக்கும் 75 வருட அரசியல் அனுபவம், சிங்கள அரசுக்கு எதிரான 35 ஆண்டுகால போர் மற்றும் அதன் வலி, போர்க்குற்றங்கள், இனப்படுகொலை, சர்வதேச நீதி உள்ளிட்ட அனைத்தையும் தூக்கி எறிந்துவிட்டு, எமது உரிமைகளை 'எக்கிய ராஜ்ஜா' மூலம் எப்படிப் பெறுவது என்பது தெரியும் என்று கூறினர்.

13ஆவது திருத்தம், ஏற்கெனவே இலங்கையின் நீதித்துறையால் நிர்வாணமாக்கப்பட்டு பிண்டமாகிவிட்டது . மேலும் 13ஆவது திருத்தம், ஒற்றையாட்சி - சிங்கள ஆட்சியின் கீழ் உள்ளது. இந்தக் காரணத்துக்காக, 13ஆவது திருத்தம் தமிழர்களின் விருப்பமல்ல. தயவு செய்து 13ஆவது திருத்தத்தையோ சமஷ்டியையோ கோராதீர்கள்; தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை கோருங்கள்.

தமிழர்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் பொதுவாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் தமிழ் இறையாண்மையைப் பெற முடியும். தாயகத்தில் உள்ள தமிழர்களாகிய நாமும், புலம்பெயர் தமிழர்களும் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கடுமையாக உழைத்து வருகிறோம் என்றார்.



## பேரணி



தமிழர் தேசம் மீதான ஆக்கிரமிப்பை நிறுத்துமாறு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் ஏற்பாடு செய்த, வடக்கில் இருந்து கிழக்கு நோக்கிய பேரணி நேற்று (06) மூன்றாவது நாளாக முல்லைத்தீவு நகரில் இருந்து நகர ஆரம்பித்தபோதான சில காட்சிகள்...

சண்முகம் தவசீலன்

## முழங்காவிலில் மேய்ச்சல் தரவை நெருக்கடி

### தீர்வுகாணப்படாமல் தொடர்கின்றது



நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, முழங்காவில் பகுதியில் உள்ள கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்த முடியாது இருப்பதாக முழங்காவில் கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முழங்காவில் பகுதியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் உள்ள போதிலும் மேய்ச்சல் தரவைகள் இல்லாததன் காரணமாக, கால்நடை வளர்ப்பாளர்கள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

முன்னர், முழங்காவில் குளத்தின் மேற்பகுதியில், கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்தக் கூடிய நிலைமை இருந்தது. வனவளத் திணைக்களத்தின் செல்வாக்குடன் பத்து பேர்வரை தற்போது குளத்தின் மேற்பகுதியில் பயிர்ச் செய்கை நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதன் காரணமாக, முழங்காவில் கால்நடைகளை குளத்தின் மேற்பகுதியில் மேய்ச்சலில் ஈடுபடுத்த முடியாத நிலைமை தற்போது காணப்படுகின்றது.

## அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாத மாங்குளம் ஆதார வைத்தியசாலை

சுப்பிரமணியம் பாஸ்கரன்

மாங்குளம் வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டாலும், அதற்கான அடிப்படை வசதிகள் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை என்றும் இதனால் நோயாளர்கள் முதல் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் வரை, பெரும் அவலங்களை எதிர்கொள்வதாக மாங்குளம் பிரதேச பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மையப் பகுதியான மாங்குளத்தில் குறிப்பாக, ஏ-9 வீதியில் அமைந்துள்ள ஒரு வைத்தியசாலையாகவும் வவுனியாவில் இருந்து 45 கிலோ மீற்றர் தொலைவிலும் கிளிநொச்சியிலிருந்து 29 கிலோ மீற்றர் தொலைவிலும் அதேபோல் முல்லைத்தீவில் 48 கிலோ மீற்றர் தொலைவிலும் மல்லாவியில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவிலும் இவ்வைத்தியசாலை அமைந்துள்ளது.

ஏ-9 வீதியிலும் ஒட்டுசுட்டான் - மாங்குளம் வீதி, மாங்குளம் - மல்லாவி வீதி உட்பட இந்தப் பகுதிகளில் அடிக்கடி ஏற்படுகின்ற விபத்துகளில் காயமடைபவர்கள் உடனடியாக மாங்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுகின்ற நிலையில், இங்கு அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் வவுனியா, கிளிநொச்சி போன்ற தூர இடங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லப்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக, மாங்குளம் வைத்தியசாலையில் குடிநீர் வசதியின்மை, அவசர சிகிச்சைப்பிரிவு இன்மை, இரத்த வங்கியின்மை, போதிய வைத்தியர் வசதியின்மை எனப் பல்வேறுபட்ட குறைபாடுகள் காணப்படுவதுடன் அனுமதிக்கப்படும் நோயாளர்களை ஏனைய வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு ஏற்றவகையில் ஒரேயோர் அம்பியுலன்ஸ் மாத்திரமே காணப்படுகின்றமையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

## அரவிந்தகுமாரின் செயற்பாடுகளுக்கு எதிராக

# ம.ம.மு அதிரடி

### சட்ட நடவடிக்கை எடுக்கவும் முஸ்தீபு

■ சுஜிதா

கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தலைமையில் செயற்படுகின்ற ஐக்கிய தொழிலாளர் முன்னணி, பதுளை மாவட்டத்தின், ஒரு சில பெருந்தோட்ட கம்பனிகளுக்கு மலையக தொழிலாளர் முன்னணியின் சந்தா பணத்தை அவர்களுடைய தொழிற்சங்க காரியாலயத்திற்கு அனுப்பி வைக்குமாறு கடிதம் மூலமாக அறிவித்திருப்பதானது, தவறான நிதி மோசடி என்பதை மலையக மக்கள் முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக நாம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம் என மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணி மலையக தொழிலாளர் முன்னணி ஆகியவற்றின் நிர்வாக சபை கூட்டம் நேற்று முன்தினம் (5) தலவாக்கலையில் நடைபெற்றது.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

எங்களுடைய கட்சியின் உறுப்பினராக இருந்த அ.அரவிந்தகுமார் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவு அளித்து, இராஜாங்க அமைச்சராக செயற்படுகின்ற நிலையில், அவர் தற்பொழுது மலையக தொழிலாளர் முன்னணி அங்கத்தவர்களின் சந்தா பணத்தை அரவிந்தகுமார் தலைமைத்துவம் வகிக்கின்ற ஐக்கிய



தொழிலாளர் முன்னணி என்ற அமைப்பினுடைய காரியாலயத்திற்கு அனுப்பிவைக்குமாறு தொழில் உறவு அதிகாரி ஊடாக கடிதம் மூலமாக அறிவித்திருக்கின்றமையானது முற்றிலும் தவறானதும் நிதி மோசடியில் ஈடுபடுகின்ற ஒரு செயலாகும் என்றும் ம.ம.மு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பான ஆவணங்களை நாம் எம்வசம் ஆதரமாக வைத்திருக்கின்றோம் என தெரிவித்த அவர், இது தொடர்பாக மிகவிரைவில் சட்ட நடவடிக்கை எடுக்க நிர்வாக சபை கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது என்றார்.

இவர்களுடைய இந்தக் கடிதத்தின்படி எந்தவொரு பெருந்தோட்ட கம்பனியாவது செயற்பட்டிருக்குமாக இருந்தால் அவர்களும் இந்த நிதி மோசடிக்கு துணைபோனவர்களாகவே நாம் கருதுகின்றோம்.

எனவே அந்தப் பெருந்தோட்ட கம்பனிகள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்க நாம் தீர்மானித்திருக்கின்றோம் என்றும் தெரிவித்தார்.

## சதிகளுக்கு மத்தியில் இ.தொ.கா பிரசாரம்



இரத்தினபுரி, ஹெரமிட்டிகல பகுதியில் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பதற்காக சென்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் உள்ளிட்ட குழுவினர், ஓட்டோவில் சென்று மக்களை சந்திக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஹெரமிட்டிகல தோட்டத்துக்கு தேர்தல் பிரசாரம் மேற்கொள்வதற்கு செல்வதற்கு ஒருசில மணிநேரத்துக்கு முன்னதாக குறித்த தோட்டத்துக்கு அண்மையில் உள்ள கிராமத்தை சேர்ந்த மாற்றுக்கட்சி நிர்வாகிகள், பிரசார நடவடிக்கைகளை தடுப்பதற்காக பாதையை உடைத்து, வாகனம் செல்ல தடைசெய்துள்ளனர்.

எனினும், அதனை முறியடித்து, வெற்றிகரமாக மக்கள் சந்திப்பை நடத்தியதாகவும் இ.தொ.கா அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இ.தொ.கா, எம்மக்களை சந்திப்பதற்கு எந்தவித தடைகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் நாம் ஒருபோதும் அஞ்சியது கிடையாது.

எமது பிரசாரத்தை தடுக்க எடுத்த முயற்சிகளை தோற்கடித்து, ஓட்டோவொன்றை வரவழைத்து, மக்களை சென்று சந்தித்ததுடன் கடந்தகாலத்தைவிட எதிர்காலத்தில் அதிகமான சேவைகளை இ.தொ.கா முன்னெடுக்குமென மக்களிடம் தெரிவித்தோம் எனவும் கூறியுள்ளது.

## பௌசர் கவிழ்ந்ததில்

# 4,000 லீற்றர் டீசல் விரயமானது

■ ஷேன் செனவிரத்ன



பேராதனை சரசவி உயன எரிபொருள் களஞ்சியசாலையிலிருந்து மஹியங்கனை இ.போ.ச டிப்போவுக்கு 6,600 லீற்றர் டீசலைக் கொண்டு சென்ற பௌசர், உடுதும்பர பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

உடுதும்பர- கோவில்மட பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (05) மாலை 4.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது பௌசரிலிருந்த 4,000 லீற்றர் டீசல் வெளியேறியுள்ளதுடன், எஞ்சியிருந்த 2,600 லீற்றர் டீசல் பேராதனை எரிபொருள் களஞ்சியசாலைக்கு மீண்டும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதன்போது பௌசரின் சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோர் காயமடைந்து உடதும்பர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான விசாரணைகளை உடதும்பர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## அடிக்கல் நாட்டப்பட்டது

கொட்டகலை, ஹரிங்டன் பகுதியில், இராமகிருஷ்ண மிஷன் சிவானந்த நலன்புரி நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஸ்ரீமத் ராஜேஸ்வரானந்த ஜீ மஹாராஜ் தலைமையில் நேற்று முன்தினம் (05) நடைபெற்றது. இதற்கான இரண்டு ஏக்கர் காணி, விஜயபாலனால் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தின் இந்திய உதவி தூதுவர் கலாநிதி ஆதிரா, இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளையின் தலைவர் விஜயபாலன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (பி. கேதீஸ்)

## இரட்டைக் கொலை சந்தேகநபர்

# தன்னுயிரை சிறையில் மாய்த்தார்

■ ஷேன் செனவிரத்ன

இரட்டைக் கொலை சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நபர் ஒருவர், தும்பர சிறைச்சாலையின் வைத்தியசாலை வளாகத்தில் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக பல்லேகல பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய சந்தேக நபரே 4ஆம் திகதி தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சந்தேகநபர், 2022 ஆம் ஆண்டு தனது உறவினர்கள் இருவரைக் கொலை செய்த குற்றத்துக்காக பல்லேகல -தும்பர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் பல்லேகல பொலிஸாரும் சிறைச்சாலை திணைக்கள அதிகாரிகளும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தபால் மூலம் வாக்கை பதிய

# 23,734 பேர் தகுதி

■ சுமணசிறி குணதிலக

மார்ச் மாதம் 9ஆம் திகதி நடத்த திட்டமிட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மொனராகலை மாவட்டத்தில் 23,724 பேர் தபால் மூலம் வாக்கு பதிய, தகுதி பெற்றுள்ளனர் என மொனராகலை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி சட்டத்தரணி நாகலிங்கம் ரேகன் தெரிவித்துள்ளார்.

தபால் மூல வாக்கை பதிவதற்கு, 24,930 பேர் விண்ணப்பித்திருந்தாலும் அதில் 1,196 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

## ரிவஸ்டன் வீதியை புனரமைக்கக் கோரி

# இரத்தோட்டையில் ஆர்ப்பாட்டம்

■ மஹேஸ் கீர்த்திரத்ன



அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் இரத்தோட்டை ரிவர்ஸ்டன் வீதி, மிகவும் மோசமான நிலையில் உள்ளமையால் தாம் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்து பிரதேசவாசிகளால் இரத்தோட்டை நகரில் நேற்று (06) காலை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மொரகஹகந்த களுகங்கை வேலைத்திட்டத்தின் கீழ் 25 கிலோ மீற்றர் தூரம் அபிவிருத்தி செய்யப்பட்டு, இரத்தோட்டையிலிருந்து இலுக்கும்பர வரையான வீதி அபிவிருத்தி கடந்த 4 வருடங்களுக்கு அதிகமாக ஒப்பந்தக்காரர்களால் முறையாக பராமரிக்கப்படவில்லை என ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர். வார இறுதி நாள்களில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிக்கு வருவதால், குறித்த வீதியில் உள்ள ஆபத்தான இடங்களை உரிய அதிகாரிகள் அவதானித்து வீதியை உடனடியாக சீரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விலை அதிகரிப்பையடுத்து

# திறக்கப்பட்ட லிட்ரோ GAS முகவர் நிலையங்கள்

■ ரஞ்சித் ராஜபக்ஷ



ஹட்டன் நகரில் சில நாள்களாக மூடப்பட்டிருந்த லிட்ரோ சமையல் எரிவாயு விற்பனை முகவர் நிலையங்கள் நேற்று (06) திறக்கப்பட்டு, சமையல் எரிவாயு விநியோகமும் முன்னெடுக்கப்பட்டது.

சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படும் விடயத்தை அறிந்திருந்த சமையல் எரிவாயு விற்பனை முகவர் நிலையங்கள், கடந்த சில நாள்களாகவே எரிவாயு சிலிண்டர் விநியோகத்தை இடைநிறுத்தியிருந்தன.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் (05) நள்ளிரவுடன் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பையடுத்து, நேற்று (06) அதிகாலை தொடக்கம் முகவர் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

# மலையக சமூகத்தின் 'ஆதர்ஷ சிற்பி' போட்டிகள்

மலையக சமூகத்தின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த மறைந்த தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் சிரார்த்ததின ஞபகார்த்தத்தையொட்டி கவிதை, கட்டுரை போட்டிகளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஊடகப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

கவிதைக்கான தலைப்புகள்:

- தடம் பதித்த தானைத் தலைவன்
- இலக்கு நோக்கி இனிய பயணத்தில் ஆறுமுகன் தொண்டமான்
- பாட்டாளி விடுதலையின் கூட்டாளி
- தலைவரது புகழைச் சொல்ல நாள் போதுமா
- உழைப்போருக்கு தோழன், ஏய்த்து பிழைப்போருக்கு...

கட்டுரைக்கான தலைப்புகள்:

- ஆளுமையின் அடையாளம் அமரர் ஆறுமுகன் தொண்டமான்
- இன்றைய மலையகத்தின் இனிய நினைவுகளில் அவர்
- அமரர் ஆறுமுகன் தொண்டமானின் அரசியல் பாதை
- இளைய தலைமுறையின் இங்கிதமான வழிகாட்டி
- சமூக எழுச்சிக்கு வித்திட்ட வீரமகன்

போட்டிகளின் விதிமுறைகள்:

- கவிதை 150 சொற்களுக்கு உள்ளும், கட்டுரை 800 சொற்களுக்கு உள்ளும் உள்ளடங்கி இருக்க வேண்டும்.
- படைப்புகள் A4 தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட வேண்டும். பெயர், முகவரி தனியாக ஒரு தாளில் எழுதப்பட்டு இணைக்கப்பட வேண்டும்.
- அச்சு, இலத்திரணியல் ஊடகங்களில் ஏற்கெனவே வெளியானவை ஏற்றுக்கொள்ளப்பட மட்டாது.

படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி: போட்டி ஏற்பாட்டாளர், இ.தொ.கா, இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07. 15.03.2023க்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். மேலதிக தகல்களுக்கு 071-6876548, 070-4329131 தொடர்பு கொள்ளவும்.

# பிரியாவிடை நிகழ்வு...



கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக நானுஓயா, கிளாசோ தமிழ் வித்தியாலய பாடசாலையின் அதிபராக கடமையாற்றிய அதிபர் சுப்பையாபிள்ளை கோகிலவாணியின் பிரியாவிடை நிகழ்வு, கிளாசோ ஏ.ஏ.டி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (05) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (எஸ்.கே. குமார்)

# தானாக இயங்கிய ட்ரெக்டர் ஓடைக்குள் பாய்ந்தது

■ ரஞ்சித் ராஜபக்ஷ



ட்ரெக்டர் ஒன்று ஓடைக்குள் பாய்ந்தில் சாரதி படுகாயமடைந்த சம்பவம் டிக்கோயா பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று (06) காலை இடம்பெற்றுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

டிக்கோயா தோட்ட தொழிற்சாலையின் களஞ்சியசாலைக்கு மரக்கட்டைகளை ஏற்றிச் சென்ற குறித்த ட்ரெக்டர், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது, திடீரென தானாக இயங்கி அருகில் இருந்த ஓடைக்குள் கவிழ்ந்துள்ளது.

இவ்வாறு தானாகவே இயங்கிய ட்ரெக்டரை நிறுத்துவதற்கு சாரதி முயன்ற போது படுகாயமடைந்தார். அவர், டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

# உயிர்களைத் துச்சமாக நினைப்பது மனிதநேயமற்ற செயலாகும்

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் 1893 இல் இடம்பெற்ற உலக மதங்களின் பாராளுமன்றத்தில் உரையாற்றிய விவேகானந்தர் "சகோதர, சகோதரிகளே" என்று அனைவரையும் விளித்தார். அவர், உலக மக்களிடையே மனித நேயத்தை எடுத்துரைக்கும் வகையிலேயே அவ்வாறு விளித்தார் என்கின்றனர்.

இந்த மனித நேயத்தை, தற்போது வாழும் மனிதர்கள் பலரிடத்தில் காணக்கிடைப்பதே அரிதாகும்.

நம் நாட்டைப் பொறுத்தவரையில், அன்றாடம் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பிலான செய்திகளை பார்க்குமிடத்து, மனித நேயம் செத்துமடிந்துவிட்டது என்று கருதுமளவுக்கு கொடூர சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தளவுக்கு கொடூர சம்பவங்கள், ஒவ்வொரு நிமிடமும் இலங்கையின் எங்கோ ஒரு மூலையில் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

ஆறு வயதான மகன், ஒன்பது வயதான மகள் ஆகிய இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவர், அவ்விருவரையும் வெட்டிச் சாய்த்துவிட்டு, தன்னுயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் மாவனெல்ல, அரநாயக்கவில் இடம்பெற்றுள்ளது.

தான் பெற்ற சிசுவின் கழுத்தை நெரித்து, படுகொலை செய்து குப்பையில் வீசியெறிதல், உயிருடன் புதைத்தல் உள்ளிட்ட சம்பவங்கள் ஒவ்வொரு நாளும் ஏராளம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான துன்பியல் சம்பவங்களில் பல, வெளிச்சத்துக்கு வராமலும் இருக்கக்கூடும்.

மகனின் தகாத உறவால், அவருடைய தாயைக் கடத்திச் சென்று துன்புறுத்தி, படுகொலை செய்த சம்பவமொன்று இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டியவில் இடம்பெற்றிருக்கின்றது. குற்றவாளியை விட்டுவிட்டு, சம்பந்தப்படாத இன்னொருவரை பழிவாங்குதல் எனும் கொடூர சிந்தனைக்குள் அகப்பட்டு அந்தத் தாய் பலி எடுக்கப்பட்டுள்ளார்.

கொடூரமான குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களுக்கும், பாதாள உலகக் கோஷ்டியினருக்கும் இடையிலேயே இவ்வாறான பழிக்குப்பழி வாங்கும் சம்பவங்கள் இடம்பெறுவதுண்டு. எனினும், இப்போது சாதாரண மக்கள் மத்தியிலும் இந்தக் கொடூரம் தொற்றிக்கொண்டுவிட்டது.

மனிதரிடத்தில் அன்பு, கருணை, இரக்கம், சமூக நுண்ணறிவு ஆகியன பலம் வாய்ந்த குணங்களாகத் திகழ்கின்றன. சக மனிதர்களிடம் அன்பு காட்டுவதை, 'மனித நேயம்' என்கின்றனர். பிறரைத் துன்பப்படுத்தாது இருத்தல்; இயலாதவர்களின் துன்பத்தைப் போக்குதல்; இளகிய இதயமும், இரக்க சுபாவமும், உறுதியான செயற்பாடுகளும் கொண்டிருத்தல் ஆகியவற்றையும் 'மனிதநேயம்' சார்ந்தே சிந்திக்கின்றனர்.

போர்க்களத்தில் நிராயுதபாணியாக நின்ற தனது எதிரியான இராவணனை "இன்று போய், நாளை வா" என்று இராமன் கூறியதையும் 'மனித நேயம்என்று வரையறுத்துள்ளனர்.

எனினும், நிராயுதபாணிகள், அப்பாவிகள், பிஞ்சுகள், கண்திறந்து உலகைப் பார்க்காத சிசுக்கள் என, பல மட்டங்களில் இருப்பவர்களும் பலியெடுக்கப்படுகின்றனர். அந்தளவுக்கு மக்களிடத்தில் கடின மனமும் தீய சிந்தனைகளும் தொற்றிக்கொண்டுள்ளன.

மறுபுறத்தில், குடும்பப் பிரச்சினைகள் காரணமாகவும் பலர் படுகொலை செய்யப்படுகின்றனர். இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமாயின், மக்களிடத்தில் மனிதநேயம் தொடர்பில் தெளிவுப்படுத்தவேண்டும். இதை ஒவ்வொரு வீட்டிலும் இருந்தும் ஆரம்பிக்கவேண்டும். இல்லையேல் படுகொலைகள் நிறைந்த, மனிதநேயமற்றவர்கள் மலிந்த நாடாக, இலங்கை மாறிவிடும் என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# 'அதிகார'கதைகளும் முஸ்லிம்களின் நிலைகளும்

மொஹமட் பாதுஷா

இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெறுவதற்கான இருதரப்புப் பேச்சுகள் கிட்டத்தட்ட நின்றுபோயுள்ள நிலையில், 13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு பற்றிய கருத்தாடல்கள் அரசாங்கத்தின் தரப்பில் இருந்து முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சுதந்திர தினத்துக்குள் தமிழர்களுக்குத் தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போயிருக்கின்றது. 70 வருட பிரச்சினையை 70 நாள்களில் தீர்ப்பது நடைமுறைச் சாத்தியமானதுமல்ல!

இதற்கிடையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்கு வந்து திரும்பிய மறுநாள், ஜனாதிபதி தமிழ்த் தேசிய கூட்டமைப்பை நோக்கி ஓர் அறிவித்தலை விடுத்தார். மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படும் என்றும், அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் கூறினார்.

இதன் எதிர்வினை, பெரும்பான்மை சமூகத்திலிருந்து வெளிக்கிளம்பியது. கடும்போக்கு அரசியல்வாதிகள் மட்டுமன்றி, பௌத்த பீடங்களும் ஜனாதிபதியின் இந்த அறிவிப்புக்கு பகிரங்க எதிர்ப்பைத் தெரிவித்தன. கடிதம் அனுப்பியிருந்த மகாநாயக்கர்களை சந்திக்கச் சென்ற ஜனாதிபதி ரணிலிடம், நேரடியாகவும் தமது நிலைப்பாட்டை அவர்கள் வலியுறுத்தினர்.

அதற்குப் பிறகு, சுதந்திர தினத்தன்று இரவு, நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், ஒற்றையாட்சிக்குள் உயர்ந்தபட்ச அதிகாரப் பகிர்வை வழங்கத் தயார் என்று ஜனாதிபதி கூறினார். ஆனால், நாடு பிளவுபட இடமளிக்கப் போவதில்லை என்பதை நேரிடையாக சொல்லியுள்ளார். காணி, பொலிஸ் அதிகார கதைகளுக்கு முன்னர் கூட, இதுபோன்ற கருத்தையே ஜனாதிபதி முன்வைத்திருந்தார்.

13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று இந்தியாவும் தமிழ்த் தரப்பும் அழுத்தம் கொடுத்து வருவது இரகசியமான சங்கதியல்ல. ஆயினும், 30 வருடங்களாக அமல்படுத்தாது இருக்கின்ற காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதாக அறிவித்தால் என்ன நடக்கும்? எதிர்வினை எவ்விதம் வெளிப்படும் என அறியாதவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கமாட்டார்.

அதையும் தாண்டி, இந்த அறிவிப்பைச் செய்த அவரின் அசட்டுத் துணிச்சலை பாராட்டலாம். ஆனால், அவர் மட்டுமன்றி அரசியல் தெரிந்த ஒரு பொதுமகன் கூட எதிர்பார்த்தது போல, சிங்கள பெருந்தேசியம் அதற்கான எதிர்ப்பை வெளியிட்டாயிற்று.

இந்த நிகழ்வுகளை எல்லாம் ஒரு தொடர் சங்கிலியாக நோக்கினால், எல்லாம் சொல்லி வைத்தாற்போல் நடந்திருக்கின்றது என்று கருதுவதற்கும் இடமுண்டு. எனவே, சிலவேளை காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றிய கதைகள் கொஞ்ச நாள்களுக்கு அடக்கி வாசிக்கப்படலாம்.

ஆனாலொன்று, மாகாண சபைகளின் ஆயுட்காலம் முடிவடைந்து வருடங்கள் கடந்துள்ளன; இன்னும் தேர்தல் நடைபெறவில்லை. எல்லை நிர்ணயம், தேர்தல் முறைமை பற்றிய வாதங்கள் உள்ளன. 13ஆவது திருத்தத்தை தொடர்ந்தும் அரசியலமைப்பில் வைத்திருப்பதா என்றுகூட பெருந்தேசியம் சிந்திக்கின்றது.

இந்தப் பின்னணியில், இல்லாத சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வது எங்ஙனம் என்றுதான் விளங்கவில்லை. ஆனால், இலங்கையில் வெளிநாடுகளின் தலையீட்டுடனான இப்போதிருக்கின்ற அரசியல் அணுகுமுறையில் எதுவும் நடக்கலாம். எதுவும் நடக்கவே மாட்டாது என்று சொல்ல முடியாது.

இந்த அடிப்படையில், அதிகாரப்பகிர்வு மற்றும் எல்லா இனமக்களுக்குமான தீர்வு தொடர்பில் குறிப்பாக, முஸ்லிம் சமூகம் இன்னும் அதிக முனைப்புக் காட்ட வேண்டியுள்ளது.

பொதுவாக, தேசிய முக்கியத்துவம்மிக்க விவகாரங்கள் பேசப்படும் போது, முஸ்லிம் அரசியல்வாதிகளும் சமூகமும் ஒருவித மெத்தனப் போக்கை கடைப்பிடிப்பார்கள். 'இப்படித்தான் கதைப்பார்கள். கடைசியில் தீர்வை, அதிகாரத்தை கொடுக்க சிங்கள தேசியம் விடாது. எனவே நாம் இதைப்பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை' என்ற கோதாவில், முஸ்லிம் தலைவர்களின் செயற்பாடுகள் இருக்கும்.

ஆனால், இதையெல்லாம் கடந்து ஒரு கட்டத்தில், இதோ சிறிய தீர்வு ஒன்று அல்லது ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வு வழங்கப்படப் போகின்றது என்று வைத்துக் கொள்வோம். அதில் முஸ்லிம் சமூகத்தின் பங்கு என்னவாக இருக்க வேண்டும் என்பதை முன்வைப்பதற்கும், அதனை வென்றெடுப்பதற்கும் முஸ்லிம் அரசியல்வாதிகள் தயார்நிலையில் இருக்கின்றார்களா என்பதுதான் இங்குள்ள கேள்வி.

தமிழர்களுக்கான இனப்பிரச்சினை பற்றியே ஆட்சியாளர்கள் பெரும்பாலும் பேசி வந்தனர். ஆனால், இதற்கு சற்று விதிவிலக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "முஸ்லிம்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன. அது பற்றியும் அவர்களிடம் பேச எதிர்பார்க்கின்றேன்" என்று அண்மையில் ஒரு நிகழ்வில் உரையாற்றும்போது குறிப்பிட்டிருக்கின்றார்.

ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வு பற்றியும் அதுவும் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குதல் என்ற எல்லை வரை சிந்திக்கின்ற ஒரு ஜனாதிபதி, முஸ்லிம்களது பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும் என்று தானாகக் கூறுவது, ஒரு நல்ல சமிக்கை என்பதை முஸ்லிம் அரசியல்வாதிகளும் பொறுப்பு வாய்ந்தவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஒருவேளை நமது கணிப்புகள், சாத்தியங்களை எல்லாம் மீறி பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படுமாக இருந்தால், அதில் முஸ்லிம்கள் என்ன நிலைப்பாட்டை முன்வைக்கலாம்? அது பற்றிய முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஒருமித்த எண்ணப்பாடு என்ன என்ற தெளிவுக்கு வர வேண்டும். இது முதலாவது விடயமாகும்.

அதேபோல், முஸ்லிம்கள் உட்பட அனைத்து மக்களினதும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, ஜனாதிபதி ரணிலுக்கு காலம் கைகூடுமா எனத் தெரியாது. ஆனாலும், அவரது ஆட்சிக்குள் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பாதையில் முன்னோக்கிச் செல்லும் வாய்ப்புள்ளது. அதனை முஸ்லிம் சமூகம் சரிவர பயன்படுத்த வேண்டும்.

தமிழர்களின் அளவுக்கு முஸ்லிம்கள் தமது உரிமைக்காக. இருப்புக்காக, அபிலாஷைக்காகத் தொடர்ச்சியாகப் போராடவில்லை. முஸ்லிம் அரசியல்வாதிகள் தமது சொந்த இருப்புக்கான, உழைப்புக்கான அரசியலாகவே அதைப் பயன்படுத்தினார்களே தவிர, சமூக விடிவுக்கானதாக கட்டமைக்கவில்லை.

இதன் விளைவாக, முஸ்லிம்களின் பிரச்சினைகள் தேசிய, சர்வதேச அரங்குகளில் தமிழ் மக்களின் விவகாரங்களைப் போல அறியப்பட்டதாக இல்லை. முறையாக கட்டமைக்கப்பட்ட அடிப்படையில் ஆவணங்கள் முன்வைக்கப்படவில்லை. இதனால், முஸ்லிம்களுக்குள்ள பிரச்சினைகள் அதன் ஆழஅகலங்கள் பிரசித்தம் பெற, அவதானிப்பை பெற முடியாது போனது.

இன்று கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு, முஸ்லிம் சமூகம் குறிப்பாக அரசியல்வாதிகள் விரைந்து செயற்பட வேண்டியுள்ளது. முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை தெளிவுறச் சொல்லாமல், அதற்கான தீர்வைத் தேட இயலாது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்

அந்த வரிசையில், முஸ்லிம்களுக்கு பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகளுடன் தொடர்புபட்ட காணிப் பிரச்சினைகள் இருக்கின்றன. இன விகிதாசாரப்படி ஒதுக்கீடு செய்வதில் மேற்கொள்ளப்பட்ட பாரபட்சங்கள், புறக்கணிப்புகள் உள்ளன. இனவாத மற்றும் மதவாத நெருக்குதல்களால் முஸ்லிம் சமூகம் கடுமையான இழப்புகளை சந்தித்துள்ளது.

முஸ்லிம்கள் மீது இனவாதிகளால் நிகழ்த்தப்பட்ட உரிமை மீறல்களைப் போலவே வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட ஆயுதக் குழுக்களால், ஒட்டுக்குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், விரட்டியடிப்புகள், கப்பம் பறிப்புகள் பற்றி பொதுவெளியில் தரவுகளை முன்வைப்பதுடன், அதற்கு நீதியை நிலைநாட்ட வேண்டியுள்ளது.

யுத்தகாலத்திலும் அதற்குப் பின்னரும் காணாமல்போன முஸ்லிம்கள் பற்றி யாரும் பெரிதாக கணக்கில் எடுத்ததாக தெரியவில்லை. போர் நிலத்தில் 'இரு தலைக்கொள்ளி எறும்பு'களாக அகப்பட்ட முஸ்லிம்களில் பலர் கடத்தப்பட்டனர்; காணாமல்போயினர். இன்னும் அவர்களுக்கு என்ன நடந்தது என்ற சட்ட ரீதியான உண்மை கண்டறியப்படவும் இல்லை; நீதி வழங்கப்படவும் இல்லை.

அளுத்கமை, கண்டி, அம்பாறை போன்ற இடங்களில் இடம்பெற்ற கலவரங்களின் ஊடாக முஸ்லிம்கள் இன, மத ரீதியாக இலக்குவைத்து தாக்கப்பட்டனர். உயிர், உடமை இழப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அதுமட்டுமன்றி, 'சஹ்ரான் கும்பல்' என்ற பயங்கரவாத குழு செய்த காட்டுமிராண்டித்தனத்தை காரணமாகக் காட்டி, முஸ்லிம்களை நோக்கிப் பாய்ந்த சட்டத்தின் கெடுபிடிகளும், இன - மத நெருக்குதல்களும் ஏற்படுத்திய வலிக்கு பரிகாரம் தேட வேண்டியுள்ளது.

அதிகாரப்பகிர்வு, தீர்வு பற்றிய கதைகளை இதற்கு முன்னர் நாம் பல தடவை கேட்டிருக்கின்றோம். எல்லாம் கடைசியில் வெறும் கதைகளாகவே காற்றில் போயின. சிறுபான்மை சமூகங்களுக்கு எந்தப் பெரிய வரப்பிரசாதங்களையும் கொடுக்காமல், ஆனால் அவர்களையும் சமாளித்துக் கொண்டு காலத்தைக் கடத்தவே ஆட்சியாளர்கள் விரும்புகின்றார்கள் என்பதே கடந்தகால படிப்பினையாகும்.

ஆயினும், அப்படி எண்ணிக் கொண்டிருப்பதன் மூலம், வாய்ப்பைத் தவறவிட்டு விடக்கூடாது என்பதே இங்கு முக்கியமானது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஏதாவது ஒரு விடயத்திலும்கூட 'நடக்காது; அதற்கான சாத்தியமில்லை' என்று தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளுக்கு நன்கு தெரிந்திருந்தும் கூட, கிடைக்கின்ற வாய்ப்பை பயன்படுத்துவதில் காட்டும் முனைப்பு இங்கு கவனிக்கத்தக்கது. இதனை முஸ்லிம் சமூகம் ஒரு முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளலாம்.

முஸ்லிம் சமூகத்துக்காகவே அரசியல் செய்கின்றோம் என்று கூறுபவர்களும் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்களும் தேர்தல் வரும்போது மட்டும் சமூகத்தின் பிரச்சினைகளை பட்டியலிட்டுப் பேசினால் மட்டும் போதாது.

ஆட்சிக்காலத்தில் கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் மூலோபாய ரீதியாகப் பயன்படுத்தி, அதில் ஒன்றிரண்டையாவது தீர்த்து வைக்கப் பாடுபட வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

விழித்திருக்கும் நிலையிலும் அநேகர் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். எதையும் ஆழமாகச் சிந்திப்பதில்லை. விடயம் புரியாமலேயே முடிவுகளை எடுக்கிறார்கள். சரி எது, பிழை எது எனத் தெரியாவிட்டால் அது உறக்கநிலைதான்.

விழிப்பு என்பது உயிரோட்டமானது; சிந்தனைகளை உருவாக்குவது; செயல்களை சரிவரச் செய்வதுமாகும். எதையாவது, எப்படியாவது செய்துமுடித்தால் சரி என எண்ணுபவர்கள், அதன் தாக்கங்கள் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

கருமங்களைச் செய்வதற்கு முன்னர், முழுமையாக யோசிப்பது நல்லது. கருமங்கள் யாவுமே எமக்கான கடமை எனப் பூரணமாக உணர்வீர்களாக!

அடுத்தவர்களுக்காகச் செய்யும் விடயங்களில், அதிக அக்கறையும் கூடுதல் கவனமும் தேவை. ஏனோ, தானோ எனச் செய்தல் ஆகாது.

காலம் பொன்னானது. கருமங்களில் அக்கறை இல்லாவிட்டால் அல்லது குறைந்தால், வரும் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும்.

ஒவ்வொரு வினாடியும், நேரத்தை திறம்படப் பயன்படுத்தி, உங்கள் முன்னேற்றங்களை நீங்களே உணர்வீர்களாக! சோம்பலினால் சோகங்கள்தான் மெல்ல மெல்ல உருவெடுக்கும். உணர்வீர்களா?.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### ஆரோக்கியபுரம் தமிழ் வித்தியாலயத்தில்

# குடிநீர் நெருக்கடி

முல்லைத்தீவு, துணுக்காய், ஆரோக்கியபுரம் தமிழ் வித்தியாலயத்தின் குடிநீர் நெருக்கடிக்கு, நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என பெற்றோர்களால் வலியுறுத்தப்பட்டு உள்ளது. இப்பாடசாலையில் நிலவும் குடிநீர் நெருக்கடி காரணமாக, மாணவர்கள் வீடுகளில் இருந்து குடிநீரை பாடசாலைக்கு கொண்டு செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

ஆரோக்கியபுரம் கிராமத்தில் 100 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற போதிலும் துணுக்காய் பிரதேச சபையால் குடிநீர் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் 40 குடும்பங்கள் பயன் பெறுகின்றன.

இலங்கை கடற்படையினரால் அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த் திட்டம், மின்சாரம் நெருக்கடி காரணமாக செயலிழந்து உள்ளதன் காரணமாக, மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இந்நிலையில், ஆரோக்கியபுரம் கிராமத்துக்கு முழுமையாக குடிநீர் வழங்கக் கூடிய திட்டம் ஒன்று வழங்கப்படும் போது, பாடசாலை மாணவர்களுக்கு முதன்மை அளித்து, குடிநீர் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமை உருவாக்கப்பட வேண்டும் என பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள அமதிபுரம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ஆரோக்கியபுரம் கிராமம், பல அடிப்படை வசதிகள் குறைந்த கிராமமாக இன்றும் காணப்படுகின்றது.

–நடராசா கிருஸ்ணகுமார்

கர்நாடகா

# ஆசியாவிலேயே மிக பெரியது



ஆசியாவிலேயே மிகப்பெரிய ஹெலிகொப்டர் தயாரிப்பு தொழிற்சாலையாகக் கருதப்படும் 'இந்துஸ்தான் ஏரோநாடிக்ஸ் நிறுவனத்தின் தொழிற்சாலையைப்' பிரதமர் மோடி நேற்றை தினம்(06) திறந்து வைத்துள்ளார்.

கர்நாடக மாநிலம் தும்கூருவில் உள்ள இத் தொழிற்சாலையின் கட்டுமானப் பணியை கடந்த 2016ஆம் ஆண்டு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து 7 ஆண்டுகளாக நடைபெற்ற பணிகள் முடிவடைந்தநிலையில் நேற்றைய தினம் குறித்த தொழிற்சாலையை மோடி திறந்து வைத்துள்ளார்.

இந்நிலையில் இத்தொழிற்சாலையில் ஆரம்ப கட்டமாக ' இலகுரக ஹெலிகொப்டர்களும், பின்னர் படிப்படியாக இலகு ரக தாக்குதல் ஹெலிகொப்டர் உள்ளிட்ட ஹெலிகொப்டர்களும் தயாரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 20 ஆண்டுகளில் 3தொன் முதல் 15 தொன் வரை எடை கொண்ட 1000 ஹெலிகொப்டர்களை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், இத்தொழிற்சாலை மூலம் 6000 பேர் வேலை வாய்ப்பு பெறுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'தளபதி 67' திரைப்படத்துக்கு

# டைட்டில் 'லியோ'

## கதை இதுதானா?




தளபதி விஜய் நடிப்பில், இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் உருவாகி வரும் "தளபதி 67" படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

தற்போது காஷ்மீரில் இந்த படத்தின் அடுத்த கட்ட படப்பிடிப்பு நடைபெற்று வரும் நிலையில், இந்தத் திரைப்படத்தின் டைட்டில் அண்மையில் வெளியாகியுள்ளது.

திரைப்படத்தின் மாஸ் டைட்டில் அது குறித்த வீடியோவில் 'தளபதி 67' படத்துக்கு 'லியோ' என்ற டைட்டில் வைக்கப்பட்டுள்ளது.

டைட்டில் டீசர் வெளியாகி வரவேற்பை பெற்றதைத் தொடர்ந்து தற்போது படத்தின் கதை குறித்த தகவல் வெளியாகியுள்ளது. கைதி மற்றும் விக்ரம் திரைப்படங்களைப் போன்று இந்த படத்தையும் லோகேஷ் போதை பொருள் கடத்தலை மையமாகக் கொண்டு இயக்க இருப்பதாக தெரியவந்துள்ளது. மேலும் இது சர்வதேச அளவிலான போதை கடத்தலை பற்றிய படமாக இருக்கும் எனவும் சொல்லப்படுகிறது.

ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி லியோ திரைப்படம் வெளியாகவுள்ளது. அனிருத் இசையில் உருவாக உள்ள இந்தத் திரைப்படத்தில் திரிஷா நாயகியாக நடிக்க, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், சஞ்சய் தத், அர்ஜுன், கௌதம் மேனன் மற்றும் மிஷ்கின் உட்பட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

உத்தர பிரதேசம்

# இந்தியாவுக்கு வருகை தரும் போப் ஆண்டவர்?



இந்தியாவுக்கு அடுத்த ஆண்டு சுற்றுப்பயணம் செல்ல திட்டமிட்டிருப்பதாக போப் ஆண்டவர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த 2017ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வரும் அவரின் திட்டம், கடைசி நேரத்தில் இரத்தானது. இந்நிலையில் தெற்கு சூடானில் இருந்து ரோம் நகருக்குச் செல்லும் வழியில் அவர் தனது அடுத்த பயணத் திட்டங்கள் குறித்து பேசினார்.

அப்போது, வரும் ஓகஸ்ட் மாதம் உலக இளைஞர் தினத்தை முன்னிட்டு போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகருக்குச் செல்லவிருப்பதாகவும், அதன் பின்னர், மங்கோலியாவுக்குச் செல்லவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன்போது அடுத்து வருடம் இந்தியாவுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




உத்தர பிரதேசம்

# திருமண விழாவில் துப்பாக்கி சூடு; இளைஞர் உயிரிழப்பு

வட இந்தியாவில் விழாக்களின் போது துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபடும் கலாசாரம் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில், உத்தரபிரதேசத்தின் புலந்த்சாகர் மாவட்டம், பிபிநகரில் நேற்றுமுன்தினம் திருமண நிச்சயதார்த்த நிகழ்ச்சியொன்று இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்ச்சியின் போது 'விஷால்' என்ற நபர் தான் வைத்திருந்த உரிமம்பெற்ற துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டு கொண்டாட்டத்தில் ஈடுபட்டார்.

இந்நிலையில் துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டபோது தவறுதலாக நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்த சரத், ராஜ்குமார் ஆகிய இருவர் மீது குண்டு பாய்ந்துள்ளது.

இதில், படுகாயமடைந்த 2 பேரும் அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சரத், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனவும், ராஜ் குமாருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த பொலிஸார் விஷாலைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சங்கர் பட ஹீரோயினுக்கு இன்று டும்..டும்.. டும்..



பிரமாண்ட இயக்குனர் ஷங்கரின் இயக்கத்தில் ராம்சரண் தேஜா நடித்து வரும் திரைப்படத்தில் நாயகியாக நடித்து வருபவர் பிரபல பொலிவுட் நடிகை கியாரா அத்வானி.

இவர் பிரபல நடிகர் சித்தார்த் மல்கோத்ராவை கடந்த சில வருடங்களாக காதலித்து வந்த நிலையில் கடந்த 6ஆம் திகதி திருமணம் செய்ய இருதரப்பு பெற்றோர்கள் முடிவு செய்தனர்.

இதனை அடுத்து திருமணம் நடைபெற இருக்கும் ராஜஸ்தானில் உள்ள அரண்மனைக்கு பொலிவுட் நட்சத்திரங்கள் குவிந்து வருகின்றனர். பிரபல தொழிலதிபர் முகேஷ் அம்பானி கூட இந்த திருமணத்திற்கு வருகை தர உள்ளதாக கூறப்படுகிறது.



## இணையத்தில் வைரலாகும்

# 'வாத்தி'இன் பாடல்கள்

கோலிவுட் முதல் ஹாலிவுட் வரை நடித்து ரசிகர்கள் மத்தியில் தனக்கென தனி இடத்தை உருவாக்கி உச்ச நட்சத்திரமாக திகழ்பவர் நடிகர் தனுஷ்.

இவரது நடிப்பில் வெங்கி அட்லூரி இயக்கத்தில் உருவாகி இருக்கும் வாத்தி திரைப்படம் தமிழ் மற்றும் தெலுங்கு என இரு மொழிகளிலும் எதிர்வரும் 17ஆம் திகதி நேரடியாக வெளியாகவுள்ளது.

ஜீ.வி பிரகாஷ் குமார் இசையமைத்திருக்கும் இந்தத் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா, நேற்று முன்தினம் மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

இது தொடர்பான வீடியோக்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றது.

இந்நிலையில், இப்படத்தின் அனைத்து பாடல்களும் இணையதளத்தில் வெளியாகி இருப்பதை ஜீ.வி பிரகாஷ் தனது சமூக வலைதள பக்கத்தில், பதிவின் மூலம் தெரிவித்து இருக்கிறார். அது தற்போது ரசிகர்களை உற்சாகப்படுத்தி வருகிறது.

பல்லாவரம்

# புதிதாக 73 விமான நிலையங்கள் உருவாக்கம்




பிரதமர் மோடியின் எட்டரை ஆண்டு கால ஆட்சி காலத்தில் புதிதாக 73 விமான நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய விமான போக்குவரத்து துறை அமைச்சர் `ஜோதிராதித்ய சிந்தியா ` தெரிவித்துள்ளார்.

அண்மையில் பல்லாவரத்தில் தனியார் பல்கலைக்கழகமொன்றில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "விமான போக்குவரத்து துறையைப் பொருத்தவரையில் உலகில் இரண்டாவது உள்நாட்டு பயண போக்குவரத்துக் கொண்ட நாடாக இந்தியா உள்ளது. அத்துடன் உலகளவில் பயணிகள் போக்குவரத்தில் ஏழாவது இடத்தில் உள்ளது" என்றார்.

மேற்கு வங்கம்

# கட்சித் தொண்டர்கள் மீது வெடிகுண்டு வீச்சு; இருவர் உயிரிழப்பு





அண்மையில் மேற்கு வங்கத்தில் திரிணாமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இரு தொண்டர்கள் மீது மர்ம நபர்கள் சிலர் வெடிகுண்டுகளை வீசிக் கொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிர்பூம் மாவட்டத்தில் நடந்து வரும் பஞ்சாயத்து தேர்தலை முன்னிட்டு தேர்தல் பணிகளில் ஈடுபட்ட இரு கட்சித் தொண்டர்கள் மீதே இவ்வாறு மர்ம நபர்கள் வெடிகுண்டுகளை வீசியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் படுகாயமடைந்த இருவரும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் இக்கொலைகளின் பின்னணியில் பாரதிய ஜனதா கட்சியும், காங்கிரஸ் கட்சியினரும் இருப்பதாக திரிணாமூல் காங்கிரஸ் கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

அதேநேரத்தில் திரிணாமூல் காங்கிரஸ் கட்சியில் நிலவும் உட்கட்சி மோதலே இக்கொலைக்குக் காரணமென பா.ஜ.கவும், காங்கிரஸும் பதிலடி கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் நயன்தாரா



லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா, இயக்குனர் விக்னேஷ் சிவனை திருமணம் செய்த பின்னர் வாடகை தாய் மூலம் இரட்டை குழந்தைகளை பெற்றார்.

இந்தக் குழந்தைகளை கவனிப்பதற்காக கடந்த சில மாதங்களாக அவர் எந்தப் புதிய படங்களிலும் நடிக்க ஒப்பந்தம் செய்யவில்லை.

அட்லி இயக்கத்தில் ஷாருக்கான் ஜோடியாக 'ஜவான்' என்ற திரைப்படத்தில் நடித்து முடித்துள்ள நயன்தாரா தற்போது புதிய இரண்டு திரைப்படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

இயக்குனர் மித்ரன் ஜவஹர் இயக்கத்தில் உருவாக இருக்கும் புதிய திரைப்படத்தில் நயன்தாரா நடிக்க உள்ளார் எனவும் நாயகிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கதையம்சம் இது என்றும் கூறப்படுகிறது.

# தமிழில் ஜான்வி கபூர் ?



பிரபல தயாரிப்பாளர் போனி கபூரின் மகள் ஜான்வி கபூர் தமிழ் திரையுலகில் அறிமுகமாக இருப்பதாக கூறப்பட்ட நிலையில் இதுகுறித்து தற்போது போனி கபூர் விளக்கம் அளித்துள்ளார்.

பிரபல இயக்குனர் லிங்குசாமி இயக்கத்தில் 'பையா 2' என்ற திரைப்படம் உருவாக இருப்பதாகவும் இந்த படத்தில் ஆர்யா மற்றும் ஜான்விகபூர் நடிக்க இருப்பதாகவும் செய்திவெளியானது. போனிகபூர் இது குறித்து விளக்கம் அளித்துள்ளார்.

இதுவரை ஜான்வி கபூர் எந்த ஒரு தமிழ் திரைப்படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகவில்லை என்றும் ஜான்வி கபூர் தமிழ் திரைப்படத்தில் நடிக்க இருப்பதாக வெளிவந்து கொண்டிருக்கும் தகவல்கள் அனைத்தும் பொய்யான வதந்தி என்றும் அவர் தனது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.



இதனை அடுத்து லிங்குசாமி இயக்கத்தில் உருவாகும் 'பையா 2' படத்தில் நடிக்க ஜான்வி கபூர் நடிக்க இதுவரை ஒப்பந்தமாகவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது பொலிவுட் திரையுலகில் பிஸியாக இருக்கும் ஜான்வி கபூர் தொடர்ந்து இந்தி படங்களிலும் மட்டுமே கவனம் செலுத்துவார் என்று கூறப்படுகிறது.

புதுச்சேரி

# பாடசாலை சீருடையில் தி.மு.க உறுப்பினர்கள்



திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அண்மையில் பாடசாலை சீருடை அணிந்து சட்டப் பேரவைக்கு சைக்கிளில் வந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதுச்சேரியில் அரச பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலைகள் திறந்து எட்டு மாதங்கள்ஆகியும் அரசு இதுவரை இலவச சீருடை மற்றும் புத்தகப்பை வழங்காததை கண்டித்தே அவர்கள் இவ்வாறு பாடசாலைச் சீருடையில் சட்டப்பேரவைக்கு வருகை தந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துருக்கி - சிரியா எல்லையில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

**1300 க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு**





துருக்கி- சிரியா எல்லையில் நேற்று அதிகாலை( 06) ஏற்பட்ட சக்திவாய்ந்த நில நடுக்கத்தில் சிக்கி 1300 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

துருக்கியின் காசியண்டெப் நகர் அருகே சுமார் 17 கிலோமீற்றர் ஆழத்தை மையமாகக் கொண்டு இப் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

மேலும் இந்நிலநடுக்கமானது இஸ்ரேல், லெபனான் போன்ற அண்டை நாடுகளிலும் உணரப்பட்டுள்ளது.

ரிச்டர் அளவில் 7.8 ஆகப் பதிவான இந்த நிலநடுக்கத்தால் துருக்கி, சிரியாவின் எல்லை நகரங்களில் உள்ள கட்டடங்கள் பல சேதமடைந்தன.

இந்நிலையில், இந்நிலநடுக்கத்தால் 912 பேர் துருக்கியிலும் 467 பேர் சிரியாவிலும் உயிரிழந்துள்ளனர் எனவும் ஆயிரக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நிலநடுக்கத்தின் பாதிப்பு அதிக அளவில் உள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் அஞ்சப்படுகிறது.



சிலி

## 24 பேரின் உயிரைப்பறித்த காட்டுத்தீ

சிலியில் காட்டுத்தீயில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 24ஆக அதிகரித்துள்ளது.

சிலியில் அண்மைக்காலமாக கடுமையான வெப்ப நிலை நிலவி வருகின்றது. இதன் காரணமாக ஏற்படும் வெப்பக் காற்றின் விளைவாக அண்மையில் பாரிய காட்டுத்தீயொன்று ஏற்பட்டுள்ளது.

இத்தீ விபத்தில் சிக்கி 24 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 1000 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனா

## சீனாவில் பயங்கரம்; 16 பேர் உயிரிழப்பு



சீனாவில் கார்கள், லொறிகள் என சுமார் 50 வாகனங்கள் தொடர்ச்சியாக ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 16 பேர் உயிரிழந்தனர்.


ஹூனான் மாகாண தலைநகர் சாங்ஷாவில் உள்ள ஒரு நெடுஞ்சாலையிலேயே நேற்று முன்தினம் மாலை இக்கொடூர விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்விபத்தின் போது வாகனங்கள் பல தீப்பற்றி எரிந்ததால் அப்பகுதியில் கரும் புகை மண்டலம் சூழ்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விபத்தில் உடல் நசுங்கியும், தீயில் கருகியும் 16 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

> “ ஒரு நெடுஞ்சாலையில் இந்த கொடூரமான விபத்து இடம்பெற்றுள்ளது

மேலும் 60-க்கும் மேற்பட்டோர் பலத்த காயம் அடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சுவிட்சர்லாந்து

## திருமண ஆடையில் கேக்

திருமண ஆடை வடிவில், கேக் ஒன்றை வடிவமைத்து சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த நடாஷா என்ற பெண் கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

கேக் தயாரிப்பாளரான நடாஷா, ஸ்வீட்டி கேக்ஸ் என்ற பேக்கரியை நடத்தி வருகிறார்.

வித்தியாசமான முறைகளில் கேக் வடிவமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுவரும் இவர் கடந்த 15 ஆம் திகதி, சுமார் 131 கிலோ கிராம் எடை கொண்ட குறித்த கேக்கைத் தயாரித்துள்ளார்.

அத்துடன் அதனை சுவிட்சர்லாந்தின் பெர்னில் நடந்த கண்காட்சியில் காட்சிப்படுத்தியுள்ளார்.

இது குறித்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.


ஆப்கானிஸ்தான்

## தூதரகத்தை மூடுவதாக சவுதி அரேபியா அறிவிப்பு

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021 ஆம் ஆண்டு தலிபான்கள்,ஆட்சியைக் கைப்பற்றியதிலிருந்து அங்கு பல்வேறு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

குறிப்பாக பெண்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் வகையில்பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

இதனால் உலக நாடுகள் பலவும் ஆப்கானிஸ்தான் மீது தமது கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றன.




இந்நிலையில் ”தலிபான்களின் ஆட்சிக்கு இதுவரை சர்வதேச அங்கீகாரம் கிடைக்கவில்லை எனவும், எனவே ஆப்கானிஸ்தானில் உள்ள தங்கள் நாடுகளின் தூதரத்தை மூடுவதாகவும் சவுதி அரேபியாவும், செக் குடியரசும் அறிவித்துள்ளன.

அவுஸ்திரேலியா

## அரசர் சார்லசின் புகைப்படம் நீக்கம்

அவுஸ்திரேலிய நாணயத்தாளில் இருந்து பிரித்தானிய அரசர் 3ஆம் சார்லசின் புகைப்படத்தை நீக்கவுள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

மறைந்த ராணி எலிசபெத் உருவப் படங்கள் பதித்த நாணயத்தாள்கள் அவுஸ்திரேலியாவில் புழக்கத்தில் இருந்தன. எனினும் அவரது மறைவுக்கு பின்னர், பழைய நாணயத்தாள்களில்




இருந்த ராணி உருவப் படத்திற்கு பதிலாக, பிரித்தானிய அரசராக பதவியேற்ற 3ம் சார்லஸின் படங்களை இடம்பெற செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டன.

உக்ரேன்

## சிறையிலிருந்து 63 போர்க் கைதிகள் விடுதலை

ரஷ்யா - உக்ரேன்இடையே கடந்த ஓராண்டு காலமாகப் போர் இடம்பெற்று வரும் நிலையில், உக்ரேன் சிறையிலிருந்து 63 போர்க் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியம் நடத்திய பேச்சுவார்த்தையின் விளைவாகவே ரஷ்ய ஆயுதப்படையைச்



சேர்ந்த அவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் உக்ரேன் போர்க் கைதிகள் 116 பேர் ரஷ்யாவால் விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் உக்ரேன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இங்கிலாந்து பிறீமியர் லீக்:**

## நடப்புச் சம்பியன்களை வீழ்த்திய டொட்டென்ஹாம்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணி உடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி தோல்வியடைந்தது.



டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹரி கேன் பெற்றார்.

அந்தவகையில், பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 50 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் உள்ளது. 45 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் சிற்றியும், 42 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட்டும், 40 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டுமுள்ளன. இதில், ஆர்சனல் ஏனைய அணிகளை விட ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

**காக்காச்சிவட்டை விஷ்ணு மகா வித்தியாலய**

## வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி

*வ. சக்தி*

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட காக்காச்சிவட்டை விஷ்ணு மகாவித்தியாலயம் (தேசிய பாடசாலை) வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

இதில் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், இளங்கோ




இல்லம்(பச்சை), வள்ளுவர் இல்லம்(நீலம்), கம்பர் இல்லம்(சிவப்பு) என மூன்றாக பிரிக்கப்பட்டு போட்டிகள் இடம்பெற்றன. இறுதியில் 383 புள்ளிகளைப் பெற்று வள்ளுவர் இல்லம் முதலாமிடத்தையும், 380 புள்ளிகளைப் பெற்று கம்பர் இல்லம் இரண்டாமிடத்தையும், 377 புள்ளிகளைப் பெற்று இளங்கோ இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

**இத்தாலிய சீரி ஏ தொடர்:**

## ஏ.சி மிலனை வென்ற இன்டர் மிலன்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், சான் சிரோவில் நேற்று அதிகாலை நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான ஏ.சி மிலனுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் இன்டர் மிலன் வென்றது.

இன்டர் மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை லொட்டரோ மார்டினெஸ் பெற்றார்.




இந்நிலையில், சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 56 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி உள்ளது. 43 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் இன்டர் மிலனும், 40 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் றோமாவும், 38 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் லேஸியோவும் காணப்படுகின்றன. இதில் லேஸியோ ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

**ஜேர்மனிய புண்டெஸ்லிகா தொடர்:**

## வொல்வ்ஸ் பேர்க்கை வென்ற மியூனிச்

ஜேர்மனிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், வி.எஃப்.எல் வொல்வ்ஸ்பேர்க்கின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான பயேர்ண் மியூனிச் வென்றது.



மியூனிச் சார்பாக, கிங்ஸ்கி கோமன் 2 கோல்களையும், தோமஸ் மல்லர், ஜமால் முஸியாலா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். வொல்வ்ஸ்பேர்க் சார்பாக, ஜகும் கமின்ஸ்கி, மத்தியாஸ் ஸ்வென்பேர்க் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

40 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் மியூனிச் உள்ளது. 39 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் யூனியன் பேர்லினும், 37 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் பொரூசியா டொட்டமுண்டும், 36 புள்ளிகளுடன் 4ஆம் இடத்தில் ஆர்.பி லெய்ப்ஸிக்கும் உள்ளன.

**ஸ்பானிய லா லிகா தொடர்:**

## மலோர்காவிடம் தோற்ற றியல் மட்றிட்

ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், மலோக்ராவின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்றிட் தோற்றது.

இதேவேளை, தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற செவிய்யாவுடனான போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வென்றது.



லா லிகா புள்ளிகள் பட்டியலில் 53 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பார்சிலோனா காணப்படுகிறது. 45 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் மட்றிட்டும், 39 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் றியல் சொஸைடட்டும், 35 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிகோ மட்றிட்டும் காணப்படுகின்றன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 07 பெப்ரவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.